**சார்பு நீதிமன்றம், மானாமதுரை**

முன்னிலை: திரு. எம். சண்முக கனி, பி.ஏ., எல்.எல்.பி.,
சார்பு நீதிபதி, மானாமதுரை
2025ம் வருடம் அக்டோபர் மாதம் 27ம் நாள் திங்கட்கிழமை

**இடைக்கால மனு எண்.2/2025**
**இன்**
**அசல் வழக்கு எண்.67/2022**

திருமலை
(மேற்படியாரின் பவர் ஏஜண்டு மற்றும் மனைவி
அனிதா மூலம்) ... மனுதாரர்/வாதி

..எதிர்..

1.அர்ச்சுணன்
2.ஆனந்தவள்ளி
3.சசிக்குமார்
4.வெங்கட்ரெட்டி
5.சார்பதிவாளர் அவர்கள் மானாமதுரை
6. மாவட்ட ஆட்சியர் சிவகங்கை

...எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இந்த மனுவானது இறுதி விசாரணைக்காக 16.10.2025-ம் தேதி இந்நீதிமன்றத்தின் முன்னர் வந்த போது, மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.D.அஜய்பிரியன் அவர்கள் முன்னிலையாகியும், 1, 2, 3, 5, 6ம் எதிர்மனுதாரர்களுக்கு எதிராக அசல் வழக்கில் ஒருதலைபட்ச உத்திரவு பிறப்பிக்கப்பட்டும், 4ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.சுரேஷ்பாபு அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்கள் கேட்டறிந்து, வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், இது நாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கலான

**உத்திரவு**

இம்மனுவானது, அசல் வழக்கில் வாதிக்காக பவர் ஏஜெண்டு ஸ்தானத்தில் இருந்து மனுதாரர் மேற்படி வழக்கை மேல்நடத்திட அனுமதி அளித்து உத்திரவிட வேண்டி கட்டளை 3 விதி 1 & 2 மற்றும் பிரிவு 151 சிபிசி–யின் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) மனுவின் சுருக்கம்:**

மனுதாரரின் கணவர் திருமலை பாகப்பிரிவினை பரிகாரம் கோரியும், Null And Void பரிகாரங்கள் கோரியும், நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும், இதர பரிகாரம் கோரியும் இந்த அசல் வழக்கு தாக்கல் செய்து நிலுவையில் இருந்து வருகிறது என்றும் மனுதாரரின் கணவர் பிழைப்பு நிமித்தம் அவசரமாக வெளிநாடு சென்றிருப்பதால் சமூகம் நீதிமன்றத்தில் ஆஜராகி மேற்படி வழக்கை நடத்த முடியாத நிலையில் உள்ளதால் பவர் ஏஜெண்டு ஸ்தானத்தில் இருந்து வழக்கை நடத்துவதற்கு மானாமதுரை சார்பதிவாளர் அலுவலகம் மூலமாக ஜெனரல் பவர் பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றும் எனவே வாதிக்காக பவர் ஏஜெண்டு ஸ்தானத்தில் இருந்து மேற்படி வழக்கை மேல்நடத்திட அனுமதி அளித்து உத்திரவிட வேண்டியது அவசியாமாக உள்ளது என்றும் கூறப்பட்டுள்ளது.

**3) 4ம் எதிர்மனுதார் தரப்பு எதிர்உரையின் சுருக்கம்:**

வாதி வெளிநாட்டிற்கு பிழைப்பு நிமித்தம் அவசரமாக சென்று இருந்தால் மனுவில் எந்த நாட்டிற்கு சென்று உள்ளார் என்பதை மனுதாரர் தெளிவாக குறிப்பிட்டிருப்பார் என்றும் உண்மையில் வாதி வெளிநாட்டிற்கு செல்லாத காரணத்தினால் தான் மனுதாரர் மனுவில் வாதி வெறுமனே வெளிநாட்டிற்கு சென்று இருப்பதாக பொய்யாக மனுவில் கூறியிருப்பது ஏற்றுக்கொள்ளதக்கதல்ல என்றும் மாண்பமை உச்சநீதிமன்றத்தில் கடந்த

06.06.2023ம் தேதிய வழக்கில் பகரப்பட்ட தீர்ப்பில் "Power of Attorney holder of a party Can Appear Only As a Witness in his personal capacity and Whatever Knowledge his about the case he can state on oath but he cannot appear as witness on behalf of the party in the capacity of the party" என்ற தீர்வும் காணப்பட்டுள்ளது, Shambhu Dutt Shastri vs State Of Rajasthan என்ற வழக்கில் Reported in (1986) 2 WLN 713, it is held in para 23 as under 23" a General Power of Attorney holder can appear, Plead and act on behalf of the Party but he cannot be come a witness on behalf of the Party. He can only appear in his own capacity" என்ற தீர்வும் காணப்பட்டுள்ளது மற்றும் மாண்பமை உச்ச நீதிமன்றத்தில் Manisha Mahendra Gala VS Shalini Bhagwan Avatramani on 10 April, 2024 என்ற வழக்கிலும் மேற்கண்டவாறே தீர்வும் காணப்பட்டுள்ளது அதன்படி தாவா மனுவில் சொத்தின் சுவான்தாரரான திருமலை தான் மனுதாரராக இருந்து மனுதாக்கல் செய்ய இயலும் என்றும் பவர் ஏஜெண்ட் ஸ்தானத்தில் அனிதா என்பவரால் தாவா மனுவைத் தாக்கல் செய்ய இயலாது என்றும் எனவே இம்மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

**4)** இரு தரப்பும் பரிசீலிக்கப்பட்டது. மேற்கண்டவாறு இருதரப்பிலும் கூறப்பட்டுள்ளதன் அடிப்படையில் இந்த மனுவினை பரிசீலினை செய்து பார்கின்ற போது 4ம் எதிர்மனுதாரர் தரப்பில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள மாண்புமிகு உச்ச நீதிமன்ற தீர்ப்புகள் அசல் வழக்கின் விசாரணையின் போது தான் பொருந்துவதாக உள்ளது. இந்நிலையில் மனுதாரர் தரப்பில், மனுதாரர் கணவர் பிழைப்பு நிமித்தம் அவசரமாக வெளிநாடு சென்றிருப்பதால் வாதிக்காக அவரது மனைவியான மனுதாரர் வாதி எழுதிக்கொடுத்த பொது அதிகார ஆவணத்தின் அடிப்படையில் அவரது பவர் ஏஜெண்டு ஸ்தானத்தில் இருந்து வழக்கை மேல் நடத்துவதற்கு அனுமதியளித்து உத்திரவிட வேண்டியது அவசியமாக உள்ளது என்று கூறப்பட்டுள்ளதன் அடிப்படையில் பார்க்கின்ற போது இந்த மனுவினை

அனுமதித்து உத்திரவிடுவது தான் நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது.

முடிவாக இம்மனு அனுமதித்து உத்திரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்திரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு என் முன்னிலையில் கணினியில் அடிக்கப்பட்டு பின் என்றால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு 2025ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 27ம் நாளான இன்று என்னால் இந்த உத்திரவு அவையறிய பகரப்பட்டது.

**ஓம்.எம்.சண்முக கனி,**
சார்பு நீதிபதி,
மானாமதுரை.

மனுதாரர்/வாதி தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள்: இல்லை

எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள்: இல்லை

**ஓம்.எம்.சண்முக கனி,**
சார்பு நீதிபதி,
மானாமதுரை.